# ஜூன் மாத அமாவாசை பெருவிழா சாட்சியங்கள்

**1. கடலூர் - S. புஷ்பமேரி**

என் சக ஆசிரியர் 70 வயதான மேரி லொயோலவிற்கு சென்னையில் முதுகு தண்டில் அறுவை சிகிச்சை நடந்து வீட்டிற்கு சென்ற நிலையில்,



மீண்டும் 13-ம் நாள் தொற்று நோய் ஏற்பட்டு அதே மருத்துவமனையில் அனுமதிக்கபட்ட நிலையில் மருத்துவர் 48 மணிநேர கெடு கூறினார். உடனே நான் எம்மாவுஸ் இயக்குநர் தந்தையவர்களை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கி ஜெபிக்க வேண்டி கூறினேன். தந்தை மற்றும் எங்களுடைய செபத்தினால் தற்போது முழு குணம் அடைந்துள்ளார். குணம் அளித்த எம்மாவுஸ் ஆண்டவருக்கு எனது இதயம் பூர்வமான நன்றிகளை காணிக்கையாக்குகிறேன்.

**2. உளுந்தூர்பேட்டை - தெளியா**



எனது மருமகள் கர்ப்பமாக இருந்தபோது பரிசோதனைக்கு சென்றபோது மருத்துவர் ஸ்கேன் செய்து பார்த்தபோது கரு சரியான வளர்ச்சியில்லை என்று கூறினார். எனவே மருத்துவமனையில் தங்கி சில நாட்கள் சிகிச்சை பெற்றும், குறைபிரசவம் தான் ஆகும் என்று கூறியது மன வேதனையை அளித்தது. உடனே எம்மாவுஸ் ஆண்டவரிடம் எந்த குறையும் இல்லாமல் குழந்தை பிறக்க தொடர்ந்து மன்றாடினேன். 10-வது மாதத்தில் குழந்தை பிறந்தது. தாயும் சேயும் நலமாக உள்ளார்கள். எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!

**3. வடதொரசலூர் - T. டேவிட்**

நான் எனக்கு இருக்கும் கடன்களை திருப்பிக் கொடுப்பதற்காக ஒரு லட்சம் சீட்டு எடுத்து கடன்களை அடைத்துவிட்டேன். பிறகு எந்த எந்த



கடன்களை யாருக்கு எவ்வளவு கொடுத்தேன் என்று எழுதி வைக்கும் போது ரூ.30,000 க்கு கணக்கு வரவில்லை. நான் யாருக்கு கொடுத்தேன் என்று நினைவு இல்லை. அப்போது ஆண்டவரிடம் வேண்டிக்கொண்டேன். யாருக்கு கொடுத்தேன் என்று நினைவுக்கு வந்தால், ரூ.1000 எம்மாவுஸ் ஆண்டவருக்கு காணிக்கை கொடுக்கிறேன் என்று வேண்டிக் கொண்டேன். பிறகு நன்றாக யோசித்துப் பார்த்தபோது நினைவுக்கு வந்தது. எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!

ஆண்டவர் நேர்மையாளரையும் பொல்லாரையும் சோதித்தறிகின்றார்; வன்முறையில்
"நாட்டங்கொள்வோரை அவர் வெறுக்கின்றார். (தி.பா. 11:7)

**4. கிள்ளனூர் - சிங்கேணி**



என் மருமகளுக்கு சில ஆண்டுகளாக குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தது. நான் ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து எம்மாவுஸ் அமாவாசை ஜெபத்திற்கு வந்து, என் மருமகளுக்கு குழந்தைபாக்கியம் கொடுத்தால் சாட்சி சொல்கிறேன் என்று வேண்டிக் கொண்டேன். ஆண்டவர் குழந்தைபாக்கியம் கொடுத்து ஆசீர்வதித்தார். எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!

**5. சித்தானூ - குப்பம்மாள்**



எந்த கெட்ட பழக்கமும் இல்லாத என் கணவருக்கு உடல் நலகுறைவு காரணமாக மருத்துவமனைக்கு சென்று பரிசோதித்ததில் நுரையீரலில் ஓட்டை உள்ளது என்று மருத்துவர் கூற மனக் கலக்கம் அடைந்தோம். முழு குணம் கிடைக்க எம்மாவுஸ் ஆண்டவரிடம் உருக்கமாக ஜெபித்து சாட்சி சொல்வதாக வேண்டிக் கொண்டேன். தொடர் சிகிச்சைக்கு பிறகு மீண்டும் பரிசோதனை செய்ததில் நுரையீரலில் பாதிப்பு எதுவும் இல்லை என மருத்துவர் கூறினார். குணம் அளித்த எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!

**6. வீரபெருமாநல்லூர் - சங்கர்**



என் மகளுக்கு உடலில் போதுமான இரத்தம் இல்லை என்பதால் சுகபிரசவம் நடைபெறாது என்று மருத்துவர் கூறிவிட்டார். நான் எம்மாவுஸ் ஆண்டவரிடம், என் மகளுக்கு சுகபிரசவம் ஆகி குழந்தையும், தாயும் நலமுடன் இருந்தால் சாட்சி சொல்வதாக வேண்டிக் கொண்டேன். மேலும் விவசாயம் செய்ய நல்ல மழையை தரவேண்டும் என்று வேண்டிக்கொண்டேன். என் மகளுக்கு நல்ல முறையில் சுகபிரசவம் ஆனது. மழையும் கொடுத்து ஆசீர்வதித்தார். எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!

**7. அமலமேரி - மேல்வழி**



எனது அண்டை வீட்டார் இரண்டு இடங்களில் போர் போட்டும் தண்ணீர் கிடைக்காத நிலையில் எங்களை அழைத்து போர் போட இடத்தை காட்டச் சொன்னார்கள். நானும், எனது மகனும் எம்மாவுஸ் ஆண்டவரிடம் வேண்டிக்கொண்டு, ஒரு இடத்தை தேர்வு செய்து கொடுக்க 300அடி போட்டும் தண்ணிர் கசிவு கூட இல்லாத நிலையில் மீண்டும் ஜெபித்து 10அடி இறக்க கூறினோம். என்ன ஆச்சரியம்! 10 அடிக்குள் தேவையான தண்ணீர் கிடைத்தது தண்ணீர் கொடுத்த எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!

**8. சந்திரா - பூசேலிபாளையம்**



எனது மகன் சண்டைபோட்டு, கோபித்துக்கொண்டு, வீட்டை விட்டு போனவன் பல நாட்களாகியும் ஒரு தகவலும் கிடைக்காத நிலையில், அமாவாசை ஜெபகூட்டத்தில் என் மகன் உயிரோடு திரும்பி வர நம்பிக்கையோடு வேண்டி சாட்சி சொல்வதாக வேண்டிக்கொண்டேன். சில நாளில் எனது மகன் வீடு வந்து சேர்ந்தான். என் மன்றாட்டை கேட்ட எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!



**9. ஜெபமாலைமேரி - வரதராஜன்பேட்**

கடந்த நவம்பர் மாதம் எனக்கு அம்மை நோய் வந்தது - அதன் பிறகு 5 மாதமாக நடக்க முடியாமல் இருந்தேன். பிறகு ஆண்டவரிடம் என் உடல் நிலை சரியாகிவிட்டால் சாட்சி சொல்வதாக வேண்டிக் கொண்டேன். எம்மாவுஸில் ஜெபிப்பவர்களிடமும் தொலைபேசியில் ஜெபிக்க சொன்னேன். இப்போது நான் எம்மாவுஸ் வந்து சாட்சி சொல்லும் அளவுக்கு என்னை குணமாக்கினார். எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!

**10. புதுமைராக்கினி - ஆணைவாரி**



எனக்கு பல ஆண்டுகளாக திருமணம் ஆகாமல் தடைப்பட்டு வந்தது. எம்மாவுஸ் ஆண்டவரிடம் வேண்டிக் கொண்ட பலருக்கு திருமணம் நடைபெற்றதை அறிந்த நானும், திருமணம் நடந்தால் சாட்சி சொல்கிறேன் என்று வேண்டிக்கொண்டேன். இப்போது எனக்கு திருமணம் நல்ல முறையில் நடந்து முடிந்தது. எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!



**11. இராயப்பன் - சாத்திப்பட்டு**

எம்மாவுஸ் ஆண்டவரிடம் குழந்தைபாக்கியத்திற்காக வேண்டிக்கொண்டேன். ஆண்டவர் குழந்தைபாக்கியம் கொடுத்து ஆசீர்வதித்தார். எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!

**12. சலேத்மேரி - ஒதியத்தூர்**



எனக்கு திருமணம் நடைபெற்றால் சாட்சி சொல்வதாக வேண்டிக்கொண்டேன். இறைவனின் அருளால் எனக்கு திருமணம் நடைபெற்றது. ஆனால் நான் சாட்சி சொல்ல வேண்டும் என்பதை மறந்துவிட்டேன். அமாவாசைக்கு இரண்டு நாட்கள் முன் இரவில், என் கனவில் இறைவன் திருமணம் நடந்தால் சாட்சி சொல்லுவேன் என்று கூறினாயே, இன்னும் நீ சாட்சி சொல்லவில்லையே என்று சொன்னார். பிறகு மறுநாள் காலையில் நான் என் அம்மாவிடம் அமாவாசை எப்பொழுது என்று கேட்டுக்கொண்டு இன்று வந்து சாட்சி சொல்கிறேன். எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!